# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். NC1756/F/2019 (SA8210/F/2018)**

**திரு. N. இரமேஷ்** ... **மேல்முறையீட்டாளர்**

**எதிர்**

**பொதுத் தகவல் அலுவலர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,**
**(சேலம்) வரையறுக்கப்பட்டது,**
**எண்.12, இராமகிருஷ்ணா சாலை,**
**சேலம் மாவட்டம் - 636 007.** ... **பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **16.08.2018** |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | **26.09.2018** |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | **01.11.2018** |
| ஆணையத்தின் ஆணை நாள் | **27.05.2019** |
| ஆணையத்திற்கு மனு நாள் | **02.07.2019** |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 27.05.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு N. இரமேஷ், தருமபுரி மாவட்டம் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-**ன் கீழ் 16**.08.2018 **தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில்**, தான் இக்கழக தருமபுரி மண்டலத்தில் முதுநிலை துணை மேலாளராக பணிபுரிந்து 31.05.2018 அன்று ஓய்வு பெற்ற நிலையில் தன் மீது எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை இல்லாத நிலையில், கடந்த ஜூன் மாதம் முழு ஓய்வூதிய தொகையையும் பெற்ற நிலையில், ஜூலை மாதம் தனது ஓய்வூதியம் ரூ.62,575/- லிருந்து ரூ.31,287/- ஆக குறைந்துள்ளது. இது சம்பந்தமாக அரசாணை ஏதேனும் பிறப்பிக்கப்பட்டதா அல்லது வேறு ஏதேனும் இது தொடர்பாக தகவல்கள் வழங்கியுள்ளார்களா என கோரி இது சம்பந்தமாக சில தகவல்களை கோரி பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மாவட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. **இந்நிலையில் பொதுத் தகவல் அலுவலர் உரிய தகவல் வழங்கவில்லை என தெரிவித்து, 26.09.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 05.10.2018 தேதியிட்டு மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்களுக்கு உரிய தகவல்கள் பெற்று அதன் இணைப்புடன் பதில் வழங்கியுள்ளார். முழுமையான தெளிவான தகவல் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், தான் கோரிய தகவல்களுக்கு உரிய ஆவணங்களுடன் தகவல் வழங்குமாறு தெரிவித்து, அவற்றை அளிக்க உத்தரவு பிறப்பிக்கும்படி கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 01.11.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.** அம்மனு மீது 27.05.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA8210/F/2018** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 02.07.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்து கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:-

- **மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 2 வருட காலத்திற்கு மேலாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவுத்தபால் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- மேல்முறையீட்டாளர் 16.08.2018 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.

- மேல்முறையீட்டாளர் 16.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC1756/F/2019 (SA8210/F/2018)</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

**பொதுத் தகவல் அலுவலர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,**
**(சேலம்) வரையறுக்கப்பட்டது,**
**எண்.12, இராமகிருஷ்ணா சாலை,**
**சேலம் மாவட்டம் - 636 007.**

<u>மேல்முறையீட்டாளர்</u>
**திரு. N. இரமேஷ்,**
**எண்.A22 ASTC நகர்,பென்னகரம் மெயின் ரோடு,**
**குமாரசாமி பேட்டை,**
**தருமபுரி மாவட்டம் - 636 701.**

Copy to: Judgement File/ Spare
JE/PA -19.11.2020